# புதிய உடன்படிக்கை - ஒரு புதிய ஆராதனை

> *உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும் (யோவா. 4:23, 24).*

நியாயப்பிரமாணத்தின்கீழ் தேவனைத் தொழுதுகொள்ளுதல் என்பது மிருகங்களைப் பலியிடுதலைச் சுற்றிக் கட்டியெழுப்பப்பட்டிருந்தது. ஆனால் புதிய பிரமாணமானது ஆவிக்குரிய பலியின்மேல் கட்டியெழுப்பப் பட்டுள்ளது. கிறிஸ்துவின் பிரமாணத்தின்கீழ் நம்மை நாம் சிலுவையில் அறைந்துகொள்ள வேண்டியுள்ளது (ரோமர் 6:4-6; கலா. 2:20) மற்றும் நாம் ஜீவ பலிகளாக வாழ வேண்டியுள்ளது (ரோமர் 12:1). நமது ஆராதனை யானது பழமையான எழுத்தின்படியற்றதாக (2 கொரி. 3:6; பிலி. 3:3), ஆனால் ஆவிக்குரிய பலிகளை அளிப்பதை விளைவிக்கின்ற புதிதாக்கப் பட்ட ஆவியின்படியானதாக இருக்க வேண்டியுள்ளது. பேதுரு பின்வருமாறு கூறினார்:

> மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்துகொள்ளப் பட்டதும், விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும், ஜீவனுள்ள கற்களைப் போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள் (1 பேது. 2:4, 5).

இந்தப் பலியானது மனித ஆவியின் ஆழத்திலிருந்து அளிக்கப்படுவதாகவும், மனித உதடுகளினால் வெளிப்படுத்தப்படுவதாகவும் இருக்க வேண்டி யுள்ளது. "ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக் கடவோம்" (எபி. 13:15).

## வித்தியாசமான ஒரு பலி

*பாவம் மற்றும் குற்றத்திற்கான பரிகாரம் என்ற வகையிலான மிருக பலிகள் மாத்திரமே (லேவி. 4:1-35; 5:1-19) நியாயப்பிரமாணத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த பலிகளாக இருந்ததில்லை. சமாதான பலி, பொருத்தனைபலி, உற்சாக பலி மற்றும் ஸ்தோத்திர பலிகளும் கூடக் குறிப்பிடப்பட்டிருந்தன (லேவி. 3:1-9; 7:11-34). இவைகள், "எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லா அதிரசங்களையும், எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லா அடைகளையும், எண்ணெயிலே பிசைந்து வறுக்கப்பட்ட மெல்லிய மாவினால் செய்த அதிரசங்களையும்" (லேவி. 7:12) உள்ளடக்க முடிந்திருந்தது. தேவன் இந்தப் பலிகளை விரும்பியது மட்டுமின்றி தூய வாழ்வையும் நொறுங்குண்ட இருதயங்களையும்கூட விரும்பினார் (சங். 51:17; ஏசா. 1:11-17).*

*இஸ்ரவேலர்கள் உடன்படிக்கைப் பெட்டியை எருசலேமுக்குக் கொண்டு வந்து கொண்டிருந்த பொழுது ஒவ்வொரு ஆறு தப்படிகள் நடந்த வேளையில் தாவீது, மாடுகளையும் கொழுத்த ஆட்டுக்கடாக்களையும் பலி செலுத்தி தேவனை வழிபட்டார் (2 சாமு. 6:13). பெட்டியானது கூடாரத்திற்கு வந்து சேர்ந்த பொழுது, அவர் தகன பலிகளையும் சமாதான பலிகளையும் இட்டார் (2 சாமு. 6:17).*

*பழைய ஏற்பாட்டின் காலத்தில் நடனத்துடனும் இசைக் கருவிகளுடனும் மக்கள் தேவனைத் தொழுது கொண்டதால் (சங். 150:4-6), அவைகளைச் சிலர் நியாயப்படுத்த நாடுகின்றனர். அவர்களின் நியாயப்படுத்துதலானது இவ்வழிமுறையில் செல்லுகின்றது: "அப்பொழுது இவைகளெல்லாம் அவருக்கு ஏற்புடையதாயிருந்தன என்றால், இப்பொழுது ஏன் அவைகளை அவர் ஏற்றுக்கொள்ள மாட்டார்?" தகன பலிகளைப் பற்றியும் இதே கேள்வியானது கேட்கப்படலாமே. தேவன் அப்பொழுது இவைகளை ஆராதனையின் ஒரு வடிவமாகக் கட்டளையிட்டார், எனவே இப்பொழுது அவர் ஏன் அவைகளை ஏற்றுக்கொள்ள மாட்டார்?*

*சில வேளைகளில் கொடுக்கப்படுகின்ற ஒரு பதில் என்னவென்றால், இயேசு தம்மை பலியாக ஒப்புக்கொடுத்துவிட்டதால் இப்பொழுது பலிகள் இனியும் ஏற்புடையதல்ல என்று தேவன் திட்டவட்டமாகக் கூறி விட்டார் என்பதேயாகும். பாவத்திற்காக ஒரு பலியை இயேசு செலுத்திவிட்டதால் பாவநிவாரணப் பலிகள் செல்லத் தக்கவையல்ல என்று வேதாகமம் கூறுகின்றது (எபி. 7:27; 9:24-28; 10:4, 8, 12, 14), ஆனால் தகன பலிகள் ஆராதனையின் வடிவத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டதென்று அது எவ்விடத்தில் கூறுகின்றது? இவைகள் நியாயப்பிரமாணம் கொடுக்கப் படுவதற்கு முன்பும் (ஆதி. 4:4; 8:20; 22:13; 31:54; 46:1; யாத். 18:12) மற்றும் நியாயப்பிரமாணம் கடைப்பிடிக்கப்பட்ட காலத்தின்போதும் ஏற்றுக் கொள்ளக் கூடியவைகளாயிருந்தன. புதிய உடன்படிக்கையில் அவைகள் எவ்விடத்திலும் கட்டளையிடப்படவில்லை என்ற உண்மையானது அவை இப்பொழுது ஆராதனையில் உள்ளடக்கப்படவில்லை என்பதையே*

அர்த்தப்படுத்துகின்றது. தகன பலிகளை நீக்கிப் போடுகின்ற அதே விதிமுறை/கொள்கையானது நியாயப்பிரமாணத்தில் நடைமுறைப்படுத்தப் பட்டு, புதிய உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாத ஆராதனையின் எந்த வடிவங்களையும் நீக்கிப் போடுகின்றது. அடுத்த பாடத்தில் நாம் நியாயப்பிரமாணமானது ஒழிக்கப்பட்டது என்று போதிக்கின்ற சில வசனங்களைக் கவனிப்போம்.

## வித்தியாசமான ஒரு ஆசாரியத்துவம்

பூமிக்குரிய ஆசாரியர்கள் மூலம் தேவனை ஆராதிப்பதற்குப் பதிலாக, கிறிஸ்தவர்கள் தேவனுடைய ஆசாரியர்களாய் இருக்கின்றனர்[1] (1 பேது. 2:9; வெளி. 1:6; 5:10; 20:6). நாம் நமது ஒரே ஒரு மத்தியஸ்தரான இயேசுவின் மூலமாகத் தேவனை ஆராதிக்க முடியும் (1 தீமோ. 2:5).

ஆசாரியத்துவத்தில் ஒரு மாற்றம் பற்றி எபி. 7:12 பேசுகின்றது. பழைய பிரமாணத்தின் கீழ் லேவிகோத்திரத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஆசாரியர்களாய் இருந்திருக்க (உபா. 21:5), இப்பொழுது கிறிஸ்தவர்கள் தேவனுக்கு முன்பாக ஆசாரியர்களாக ஊழியம் செய்கின்றனர். நாம் ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாகவும் (1 பேது. 2:5, 9), இயேசுவை நமது பிரதான ஆசாரியராகவும் கொண்டிருக்கிறோம் (எபி. 2:17; 4:14, 15; 5:5, 10).

> பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார். அவர் பிரதான ஆசாரியர்களைப் போல முன்பு சொந்தப் பாவங்களுக்காகவும், பின்பு ஜனங்களுடைய பாவங்களுக்காகவும் நாடோறும் பலியிட வேண்டுவதில்லை; ஏனெனில் தம்மைத்தாமே பலியிட்டதினாலே இதை ஒரேதரம் செய்து முடித்தார் (எபி. 7:26, 27).

## வித்தியாசமான ஒரு மார்க்கம்

### எந்த இடத்திலும்

ஆராதனை இனியும் எருசலேமில் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுச் செய்யப்படாது என்றும் சடங்குகள் அங்கு நிகழ்த்தப்படாது என்றும் இயேசு போதித்தார். ஆராதனையானது ஆவியிலும் உண்மையிலும் செய்யப்பட வேண்டும் என்று அவர் உரைத்தார் (யோவா. 4:23, 24). இயேசுவைப் பொறுத்தமட்டில், தேவனை ஆராதிக்கும்படியான ஒரு புதிய நாள் உதயமாகிக் கொண்டிருந்தது. நியாயப்பிரமாணம், எருசலேம் மற்றும் அங்கு ஏறெடுக்கப்பட்ட நிழலாட்டமான ஆராதனை ஆகியவற்றை நோக்கியிருப்பதற்குப் பதிலாக (எபி. 8:5), தேவனுக்கு ஏற்புடைய ஆராதனையானது இயேசு கிறிஸ்துவின் மூலமாக வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தின்படியானதாக இருக்கும் (யோவா. 1:17). தேவன் இஸ்ரவேலுக்குக் கொடுத்திருந்த ஆராதனைமுறைமையை இனியும் அவர்

ஏற்றுக்கொள்ளுவதில்லை.

### ஆவியில்

நியாயப்பிரமாணத்தின் கீழ் இருதயமானது வலியுறுத்தப்படவில்லை என்றாலும், தேவன் எப்பொழுதுமே ஆராதனையானது மனித ஆவியின் ஆழத்திலிருந்து வருகிறதாக, இருதயத்தில் இருந்து வருகிறதாக இருக்க வேண்டும் என்று விரும்பினார். புதிய ஏற்பாட்டின் ஆராதனையாளர்கள் ஆவியிலும் உண்மையிலும் ஆராதிக்க வேண்டும், ஏனெனில் அவர்கள் அவ்விதமாய் ஆராதிக்க வேண்டுமென்றுதான் பிதாவானவர் விரும்பு கின்றார் (யோவா. 4:23, 24). "வேண்டும்" என்ற வார்த்தையை இயேசு பயன்படுத்தினார் என்ற உண்மையானது விருப்பத்தேர்வு எதையும் செயல்படுத்த முடியாது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. ஆராதனை யாவும் இந்த அளவீடுகளுக்குள்ளேயே இருக்க வேண்டும்.

ஆவியில் தொழுதுகொள்ளுதல் என்பது மனித ஆவியில் தொடக்கம் பெற்று வெளிப்படுத்தப்படுகின்ற ஆராதனையாக உள்ளது. தேவனுக்கு ஆராதனையை வெளிப்படுத்த உள்ளான மனிதனின் உணர்வறிவுள்ள முயற்சிகளின்றி, ஆராதனையின் இயக்கங்களானவை வெறுமையானவை களாகவும் தேவனுக்கு ஏற்புடையதற்றவைகளாகவும் உள்ளன. அவர் ஒரு புறம்பான மற்றும் உடல் ரீதியான செயல்களில் மட்டும் ஆர்வமுடைய வராய் இருப்பதில்லை. ஆராதனையானது ஆவியிலிருந்தும் இருதயத்தி லிருந்தும் வர வேண்டும் (எபே. 5:19).

### உண்மையில்

ஆராதனையானது ஆவியில் இருக்க வேண்டியது மட்டுமின்றி, உண்மையிலும் இருக்க வேண்டும். உண்மையானது/சத்தியமானது இயேசு வின் மூலமாக வந்தது (யோவா. 1:14, 17; 8:31, 32; 14:6; எபே. 4:21). இந்த சத்தியமானது பிதாவினிடத்திலிருந்து தோன்றியது (யோவா. 17:17; யோவா. 12:49, 50ஐக் காணவும்). இயேசுவிடமிருந்து அப்போஸ்தலர்கள் கேள்வியுற்றிருந்த சத்தியத்தைப் பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு நினைவூட்டி (யோவா. 14:26) அவர்களைச் சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்தினார் (யோவா. 16:13). நாம் இப்பொழுது கிறிஸ்துவுக்குள் பரிபூரண முள்ளவர்களாயிருக்கிறோம் (கொலோ. 2:10), அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது (கொலோ. 2:3). இந்தக் காரணத்தினால், தேவனுடைய ஆராதனையில் மனிதப் பாரம்பரியங்களைப் பயன்படுத்தும்பொழுது அவை பயனற்றவைகளாக உள்ளன (மத். 15:7-9; மாற். 7:6-13; கொலோ. 2:8; தீத்து 1:14).

புதிய உடன்படிக்கையின் ஆராதனையானது அப்போஸ்தலருடைய உபதேசத்தில் தரித்திருத்தல், ஜெபித்தல் (அப். 2:42), கர்த்தருடைய இராப் போஜனத்தில் இயேசுவை நினைவுகூருதல் (1 கொரி. 11:23-26), இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணுதல் (எபே. 5:19; கொலோ. 3:16), மற்றும் நமது மனதில் நியமித்தபடி நாம் (காணிக்கை)

கொடுத்தல் (2 கொரி. 9:7) ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. ஆராதனையில் வெளிப்படை வடிவங்களான இவ்வழிமுறைகள் தேவனை ஆராதிப்பதில் ஆவியின் தோழமை இல்லாத வரையில் ஏற்றுக் கொள்ளப்படாத வைகளாகவே இருக்கும்.

### தசமபாகம் இல்லாமல்

நியாயப்பிரமாணத்தின் கீழ் (வாழ்ந்த) ஒருவர் தாம் பெறும் வருமானம் எல்லாவற்றிலும் இருந்து தசமபாகத்தை, அதாவது பத்தில் ஒரு பங்கை காணிக்கை தர வேண்டியதாக இருந்தது. இது மக்களால் சுயவிருப்பக் காணிக்கையாக அல்ல ஆனால் கடமைப்பட்ட காணிக்கையாகத் தரப்பட வேண்டியிருந்தது. தசமபாகமானது லேவி கோத்திரத்தை போஷிப்பதற் காகக் கொடுக்கப்பட்டது.

> இதோ, லேவியின் புத்திரர் ஆசரிப்புக் கூடாரத்தின் பணி விடையைச் செய்கிற அவர்களுடைய வேலைக்காக, இஸ்ரவேலருக் குள்ளவை எல்லாவற்றிலும் தசமபாகத்தை அவர்களுக்குச் சுதந் தரமாகக் கொடுத்தேன். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் படைப்பாகிய தசமபாகத்தை லேவியருக்குச் சுதந்தர மாகக் கொடுத்தேன்; ஆகையால் இஸ்ரவேல் புத்திரரின் நடுவே அவர் களுக்குச் சுதந்தரமில்லையென்று அவர்களுக்குச் சொன்னேன் என்றார் (எண். 18:21, 24).

தேசம் பங்கிடப்பட்ட பொழுது, லேவிகோத்திரத்தாருக்குக் காணியாட்சி எதுவும் கொடுக்கப்படவில்லை (எண். 18:20). ஆகையால் அவர்கள் தசமபாகத்தைத் தவிர ஆதரவு வழி எதுவும் இல்லாதிருந்தனர். இந்தத் தசமபாகமானது லேவியர்களை ஆதரிப்பதற்காக இஸ்ரவேல் மக்களிடம் இருந்து எடுக்கப்பட வேண்டியதாக இருந்தது (எண். 18:26).

நியாயப்பிரமாணமானது கொடுக்கப்படுவதற்கு முன்பு, சாலேமின் அரசரான மெல்கிசேதேக்கிற்கு, ஆபிரகாம் தசமபாகம் கொடுத்தார் (ஆதி. 14:20). யாக்கோபும் கூட, தேவன் தம்மை ஆசீர்வதிக்கும் எல்லாவற்றிலும் அவருக்குத் தசமபாகம் கொடுப்பதாக ஆணையிட்டார் (ஆதி. 28:20-22). இந்த மனிதர்கள் கர்த்தருக்குத் தசமபாகத்தைக் கொடுத்திருப்பினும், மற்றும் நியாயப்பிரமாணமானது தசமபாகத்தை வற்புறுத்தியிருப்பினும், புதிய ஏற்பாடு நம்மைத் தசமபாகம் கொடுக்கும்படி கட்டுப்படுத்துவதில்லை. நாம் இப்பொழுது நமது வரவுக்குத் தக்கதாகக் கொடுக்க வேண்டும் (1 கொரி. 16:2). நாம் நமது மனதில் நியமித்தபடியே உற்சாகமாய்க் கொடுக்க வேண்டும் (2 கொரி. 9:7).

## முடிவுரை

புதிய உடன்படிக்கையானது, தேவன் இஸ்ரவேலுக்குக் கொடுத்திருந்த நியாயப்பிரமாணத்தின் அதே வகையான விதிகளை கொண்டிருப்பதில்லை. தேவன் நமக்குப் பொறுப்புக்களைக் கொடுத்துள்ளார், ஆனால் நாம்

எவ்வளவு அதிகமாய் அல்லது எவ்வளவு குறைவாய் செய்ய வேண்டும் என்று அவர் கூறியிருக்கவில்லை. நாம் எவ்விதம் நன்றாக ஊழியம் செய்ய முடியும் என்பதை, நம்முடைய இருதயத்தில் நாம் நிச்சயம் செய்ய வேண்டும். நாம் குறைவாய் ஊழியம் செய்தால், அது நம்மை நாமே மட்டுப்படுத்திக் கொண்ட காரணத்தினாலேயே ஆகும்; நாம் அதிகமாய் ஊழியம் செய்தால், அது தேவனுக்கென்று நாம் பெரிய ஊழியம் செய்ய விரும்புகின்ற காரணத்தினாலேயே ஆகும். நாம் செய்ய வேண்டியவை குறித்து நமது இருதயங்களின் தூண்டுதலினுடைய (1 கொரி. 4:5) அடிப்படையிலேயே நாம் நியாயந்தீர்க்கப்படுவோம் (ரோமர் 2:6; 2 கொரி. 5:10; 1 பேது. 1:17). தேவன் நமது இருதயங்களைச் சோதித்து அறிகிறார் (1 தெச. 2:4) மற்றும் நமது கிரியைகளின்படியே நம்மை அவர் நியாயந்தீர்க்கின்றார் (ரோமர் 2:6; 1 பேது. 1:17).

நமது செயல்களுக்குத் தேவன் அளவீடுகளை அமைத்துள்ளார், இது அப். 15:29ல் தெளிவாகின்றது. இருப்பினும் நாம் எவ்வளவு கொடுக்க, பாட, ஜெபிக்க, படிக்க, தேவையில் இருப்போருக்கு உதவ வேண்டும் அல்லது வேறு எந்த ஊழியத்தையாவது எவ்வளவாய்த் தேவனுக்குச் செய்ய வேண்டும் என்பது வரும் பொழுது - தேவ வசனத்தினால் வழி நடத்தப் பட்ட - நமது இருதயங்களே நம்மை ஆள வேண்டியுள்ளது. நியாயப் பிரமாணத்தின் கீழ் அனுமதிக்கப்படாத ஒரு சுயாதீனத்தை நாம் பெற்றுள்ளோம்.

---

குறிப்பு

[1]"புதிய ஏற்பாட்டு சபை பற்றிய கேள்விகள்" என்ற புத்தகத்தில், "புதிய ஏற்பாட்டின் சபை ஆசாரியர்களைக் கொண்டதா?" என்ற பாடத்தைக் காணவும்.